**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS. No. 73/2024

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ம் நாள் செவ்வாய் கிழமை PW1-இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 12.08.2025 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | சாதிக் உசேன் (PW1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | வயது : | |

**<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபணபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். நிரூபணபிரமாண வாக்கு மூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

1) 05.11.1982 ம் தேதியிட்ட என் தந்தையின் கிரய ஆவணம் வா.சா.ஆ. 1 ஆகவும்

2) 01.02.2022 ம் தேதியட்ட என் தந்தை எனக்கு எழுதிக் கொடுத்த செட்டில் மெண்ட் ஆவணம் அசல் வா.சா.ஆ.2 ஆகவும்

3) வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.3 ஆகவும்

4) அஞ்சல ரசீதுகள் அசல் வா.சா.ஆ.4 ஆகவும்

5) அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ. 5 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது.

தாவாபடி தீர்வாக வேண்டுகிறேன்.